# தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், திண்டுக்கல்

முன்னிலை – திருமதி. வா. தீபா, M.L.,
தலைமை நீதித்துறை நடுவர், திண்டுக்கல்.

2026ம் ஆண்டு ஜனவரி மாதம் 29–ம் நாள் வியாழக்கிழமை

Cr.M.P.03/2025 in CC.No.356/2022

காவல் துணைக் கண்காணிப்பாளர்,
ஒட்டன்சத்திரம் துணை பிரிவு,
செம்பட்டி காவல் நிலையம்,
குற்ற எண்.388/2013 ......மனுதாரர் / குற்ற முறையீட்டாளர்.

//எதிர்//

நாகராஜ் .......... எதிர் மனுதாரர் / எதிரி.

1) பால்பாண்டி
2) விஷ்ணு
3) ஸ்ரீராம்
4) ஜெயச்சந்திரன் ....... எதிரியாக சேர்க்கப்பட வேண்டியவர்கள்.

இந்த மனுவானது 29.01.2026–ம் தேதியன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்த போது, மனுதாரர் / குற்ற முறையீட்டாளர் தரப்பில் திரு. S.S. வாசன், அரசு தரப்பு உதவி வழக்கறிஞர் அவர்களும் எதிர் மனுதாரர் தரப்பில் திரு. A. ஜான் ரூபன் அவர்களும், முன்னிலையாகியும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து, இதுநாள் வரையில் இந்த நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்து, இன்று இந்த நீதிமன்றம் வழங்கும்

## உத்தரவு

மனுதாரர் / குற்ற முறையீட்டாளர் தரப்பில் பிரிவு 319 Cr.P.C. r/w. 358 BNSS–ன் கீழ் 1 முதல் 4 வரையுள்ள நபர்களை எதிரிகளாக சேர்க்கக் கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுவின் சுருக்கம் :–

இந்த வழக்கு விசாரணையின் போது, சாட்சிப் பட்டியலில் காட்டப்பட்டுள்ள LW1, LW2, LW3 ஆகியோர் அரசு தரப்பில் அ.சா.1, அ.சா.2, அ.சா.3 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். அ.சா.1ன் கணவர் அ.சா.2 ஆவார். அவர்களது மகன் அ.சா.3 ஆவார். அ.சா.1–ன் சாட்சியத்தில், கடந்த 11.11.2013ம் தேதி 3.00 மணிக்கு அ.சா.1ம் அவரது கணவர் அ.சா.2ம் செம்பட்டியில் உள்ள வேலுநாயக்கர் கடைக்கு சாப்பிடுவதற்காக சென்றிருந்ததாகவும், கடையில் வேலு நாயக்கருடன் பேசிக் கொண்டிருந்தபோது, அ.சா.1, அ.சா.2 மற்றும் கடைக்காரர் மூவரும் பேசிக் கொண்டிருந்ததைப் பார்த்த நாகராஜ், பால்பாண்டியும் சக்கிலிய கூதி மகனே எங்களை பற்றித் தான் பேசிக் கொண்டிருக்கிறாய் என்று கூறி நாகராஜ் என்பவர் அ.சா.2 முருகனை சட்டையினை பிடித்துக் கொள்ள பால்பாண்டி என்பவர் அ.சா.2ஐ கட்டையால் இடுப்பு, கால், கை ஆகிய இடங்களில் அடித்தார் என்றும், அதன் பின்பு சுமார் 2 மணி நேரம் கழித்து இரவு 7.30 மணியளவில் அ.சா.1, அ.சா.2 ஆகிய இருவரும் வீட்டிற்கு வந்து, அருகில் உள்ள மாட்டு கொட்டத்தில் நடந்த சம்பவத்தினை அ.சா.1, அ.சா.2 அவர்களது மகன் அ.சா.3 வெங்கடேஷ் குமார் ஆகியோர் பேசிக் கொண்டிருந்ததாகவும், அ.சா.1 வீட்டிற்குள் சென்ற பிறகு இரண்டு ஆட்டோ நிறைய ஆட்கள் மற்றும் இரண்டு சக்கர வாகனத்தில் ஆட்கள் வந்து கடப்பாறை மற்றும் கம்பியுடன் வந்த நபர்கள் அ.சா.2, அ.சா.3 ஆகியோரை அடித்துள்ளார்கள். கல்லைத் தூக்கி எறிந்துள்ளார்கள். அ.சா.1 சத்தம் கேட்டு வீட்டில் இருந்து வெளியே வந்து அவர்களிடம் அடிக்காதீர்கள் என்று சொன்னதற்கு, சக்கிலிச்சிக்கு உனக்கு இவ்வளவு திமிறா நீ என்ஜினியருக்கு படிக்க வைக்குற என்று சொல்லி அ.சா.1ஐ இழுத்து தள்ளிவிட்டு நீயெல்லாம் என்ஜினியருக்கு படிக்கனுமாடா என்று சொல்லி பால்பாண்டி அடித்ததாகவும், அ.சா.2–ஐ பால்பாண்டி என்பவர் இரும்பு கம்பியைக் கொண்டு அழுத்தினார். நாகராஜ் கடப்பாறை கம்பியினால் அ.சா.2–ஐ

அடித்துள்ளார். ஜெயச்சந்திரன், விஷ்ணு, ஸ்ரீராம் ஆகியோர்கள் கற்களைக் கொண்டு எறிந்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

2.2. அ.சா.2 அவர் தன் சாட்சியத்தில், கடந்த 11.11.2013ம் தேதி சுமார் 3.00 மணியளவில் செம்பட்டி பேருந்து நிலையத்திற்கு அருகில் வேலு நாயக்கரின் முனியாண்டி விலாஸ் ஓட்டலுக்கு அவரது மனைவி அ.சா.1–ம் சாப்பிடுவதற்காக சென்று வேலுநாயக்கருடன் பேசிக் கொண்டிருந்தபோது, பால்பாண்டியும், நாகராஜும் வந்து ஏண்டா சக்கிலிய கூதி மகனே என்று பால்பாண்டி பிடித்துக் கொள்ள, நாகராஜ் அ.சா.2–ஐ கட்டையால் இடுப்பு, நெஞ்சு, முதுகு ஆகிய இடங்களில் அடித்தார். மூன்று மணி நேரம் கழித்து சுமார் 8.00 மணியளவில் வீட்டிற்கு சென்று அங்கு அ.சா.2–ன் மகனான அ.சா.3–னுடன் சண்டை சப்ந்தமாக பேசிக் கொண்டிருந்தபோது, பால்பாண்டி, நாகராஜ், ஸ்ரீராம், விஷ்ணு, ஜெயச்சந்திரன் மற்றும் அடையாளம் தெரியாத 17 நபர்கள் இரண்டு ஆட்டோ மற்றும் இரண்டு இருசக்கர வாகனத்தில் வந்து அ.சா.2, அ.சா.3 ஆகியோரை இழுத்து அடித்து சக்கிலிய கூதிமகனே நீ என்ஜினியருக்கு, ஆசிரியருக்கு படிக்க வைக்கலாமா என்று கூறி அடித்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

2.3. அ.சா.3 தனது சாட்சியத்தில், கடந்த 11.11.2013–ம் தேதி இரவு 8.00 மணியளவில் மதியம் வேலுநாயக்கர் ஓட்டலில் பால்பாண்டியும், நாகராஜும் தனது அப்பாவையும், அம்மாவையும் அடித்தது தொடர்பாக அப்பாவுடன் பேசிக் கொண்டிருந்தபோது, சுமார் 9.00 மணியளவில் 2 ஆட்டோ மற்றும் 2 இருசக்கர வாகனத்தில் பால்பாண்டி, நாகராஜ், ஜெயச்சந்திரன், பால்பாண்டியின் அக்கா மகன் விஷ்ணு, ஸ்ரீராம் உள்ளிட்ட பெயர் தெரியாத அடையாளம் தெரியாத சுமார் 17 நபர்கள் வந்து பால்ரபாண்டி தனது அப்பாவின் கழுத்தில் கடப்பாரை வைத்து அழுத்திக் கொள்ளவே நாகராஜ் கட்டையால் தனது அப்பாவை அடித்தார். விஷ்ணு, ஸ்ரீராம் ஆகியோர்கள் அ.சா.3ஐ அடித்து ஆடைகளை கிழித்து

ஜட்டியுடன் ரோட்டில் இழுத்து போட்டுவிட்டார்கள். செல்வராஜ் மற்றும் ஜெயச்சந்திரனும் கல்லைக் கொண்டு எங்கள் மீது எறிந்தார்கள் என்றும், தனது அம்மாவை தலையைப் பிடித்து கீழே தள்ளிவிட்டார்கள் என்றும், பால்பாண்டி எனது அம்மாவை மார்பில் உதைத்து சக்கிலிய கூதி மகனே உனது மகனை இன்ஜினியரிங் படிக்க வைக்கிறாயா எப்படி படிக்க வைக்கிறாய் என்று பார்ப்போம் என்றும், உங்களை கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டினார்கள் என்று சாட்சியம் அறித்துள்ளார்.

2.4. மேற்படி அ.சா.1, அ.சா.2, அ.சா.3 ஆகியோரின் சாட்சியங்களின் அடிப்படையில். குற்றம் சாட்டப்பட்ட பால்பாண்டி, ஸ்ரீராம், விஷ்ணு மற்றும் ஜெயச்சந்திரன் ஆகியோர் இந்த வழக்கு குற்ற சம்பவத்தில் ஈடுபட்டுள்ளனர். மற்றும் குற்றம் சாட்டப்பட்ட பால்பாண்டியின் பெயரும் FIR இல் உள்ளது. மேலே கூறப்பட்ட குற்றம் சாட்டப்பட்ட பால்பாண்டி, விஷ்ணு, ஸ்ரீராம் மற்றும் ஜெயச்சந்திரன் ஆகியோருக்கு எதிராக முதன்மை வழக்கு உள்ளதால், வழக்கின் சரியான தீர்வுக்காகவும், நீதியின் நலன் கருதியும், மேற்படி நபர்களை இந்த வழக்கில் எதிரிகளாக சேர்த்து, அவர்கள் மீது உரிய குற்றச் சாட்டுக்களை வனைந்து அவர்களை ஒரு எதிரியாக விசாரிக்கப்பட வேண்டும் என மனு தாக்கல் செய்து இருக்கிறார்.

<u>3. முன்மொழியப்பட்ட குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் / எதிர் மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் :–</u>

மனுதாரர் / குற்றமுறையீட்டாளர் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவில் கண்ட சங்கதிகள் யாவும் உண்மைக்குப் புறம்பானவை. சட்டப்படியும், நியாயப்படிக்கும் செல்லத் தக்கதல்ல. மனுவில் முன்மொழியப்பட்ட குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் வெளிப்படையாக ஒப்புக் கொள்ளப்பட்ட சங்கதிகளைத் தவிர மற்ற அனைத்தையும் மறுக்கிறார்.

3.1. மேற்படி வழக்கானது சமூகம் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அமர்வு வழக்கு எண்.2/2022க்கு எதிர் வழக்காகும். மேற்படி வழக்கில் உள்ள 7 எதிரிகளில் அ.சா.2 முருகன் முதல் எதிரியாகவும், அ.சா.3 வெங்கடேசன் 2வது எதிரியாகவும் வருகிறார்கள். மேலும், முன்மொழியப்பட்ட எதிரிகளில் (Proposed accused) பால்பாண்டி மற்றும் ஜெயச்சந்திரன் ஆகிய இருவர்கள் அமர்வு வழக்கு எண்.02/2022ல் சாட்சிகளாக உள்ளனர். மேற்படி வழக்கில் ஜெயச்சந்திரன் கொடுத்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. பால்பாண்டி காயம்பட்ட சாட்சி ஆவார். முன்மொழியப்பட்ட எதிரிகள் ஸ்ரீராம், விஷ்ணு சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றும், சி.சி.எண்.356/2022 வழக்கில் அ.சா.1 கண்மணி (எ) முனியம்மாள், அ.சா.2 முருகன் இருவரும் கணவன் மனைவி ஆவார்கள். அ.சா.3 வெங்கடேஷ்குமார் அ.சா.1 மற்றும் அ.சா.2ன் மகன் ஆவார்.

3.2. அ.சா.4 வேலுச்சாமி தனது முதல் விசாரணையில், 11.11.2013ம் தேதி முருகன் என்பவர் மதியம் 2.00 மணிக்கு சாப்பிட வந்தார் என்றும், அவரது குறுக்கு விசாரணையில், முருகனின் மனைவி கடைக்கு வரவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளதில் இருந்து அ.சா.1 கண்மணி (எ) முனியம்மாள் அ.சா.2 முருகனுடன் சாப்பிட வரவில்லை என்பது தெளிவாக தெரிய வருகிறது. மேலும் இதை வலுப்படுத்தும் விதமாக சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கையில் "முருகனின் மனைவி சம்பவ நேரத்தில் இல்லை " என்று பட்டியல் சாட்சி 16 ஜானகி ராம், புலன் விசாரணை அதிகாரி குறிப்பிட்டுள்ளார். அ.சா.1 அவரது சாட்சியத்தில், நாகராஜ் எனது கணவர் முருகனின் சட்டையினை பிடித்துக் கொள்ள பால்பாண்டி எனது கணவரை கட்டையால் இடுப்பு, கை, கால் ஆகிய இடங்களில் அடித்தார் என்று சாட்சியம் அளித்துள்ளார். ஆனால், அ.சா.2 அவரது சாட்சியத்தில் பால்பாண்டி பிடித்துக் கொள்ள நாகராஜ் என்னை கட்டையால் இடுப்பு, நெஞ்சு, முதுகு ஆகிய இடங்களில் அடித்தார் என்று அ.சா.1ன் சாட்சியத்திற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளார்.

3.3. மேலும், அ.சா.ஆ.1 புகாரில் சம்பவம் 11.11.2023 அன்று இரவு 9.00 மணிக்கு நடைபெற்றதாகவும், அ.சா.1 தனது முதல் விசாரணையில், இரவு 7.30 மணியளவில் நடைபெற்றதாகவும், அ.சா.2, அ.சா.3 ஆகியோர் சம்பவம் இரவு 8.00 மணிக்கு நடைபெற்றதாகவும், மேற்படி இருவரும் சிகிச்சைக்காக சென்றபோது, அ.சா.10 மருத்துவரிடம் இரவு 9.30 மணிக்கு சம்பவம் நடைபெற்றதாகவும் மேற்படி மூவரும் சம்பவ நேரம் குறித்து முன்னுக்குப் பின் முரணாகவே சாட்சியம் அளித்துள்ளார்கள். சம்பவ இடம் குறித்து முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார்கள். மேலும், புகாரில் முன்மொழியப்பட்ட குற்றம் சாட்டப்பட்டவர்களான விஷ்ணு, ஜெயச்சந்திரன் ஆகியோரின் பெயர்கள் பற்றியோ, அவர்கள் கற்களை கொண்டு எறிந்ததாகவோ குறிப்பிடவில்லை. அ.சா.2, அ.சா.3 ஆகியோர்கள் தன்னை தெரிந்த 3 நபர்கள் என்றும், தெரியாத 17 பேர்கள் தாக்கியதாக அ.சா.10 மருத்துவரிடம் தெரிவித்துவிட்டு, நீதிமன்ற சாட்சியத்தின்போது, நாகராஜ் தவிர முன்மொழியப்பட்ட எதிரிகளின் 4 பெயர்களை குறிப்பிட்டு சொல்லி இருப்பது நம்பத் தகுந்த சாட்சியம் அல்ல.

3.4. எனவே, மேற்படி சி.சி.எண்.356/2022 வழக்கை புலன் விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்த பட்டியல் சாட்சி எண்.16 திரு.ஜானகிராம், ஒட்டன்சத்திரம் உட்கோட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களை விசாரித்தால் இவ்வழக்கில் முன்மொழியப்பட்ட குற்றம் சாட்டப்பட்டவர்களான 1. பால்பாண்டி, 2. விஷ்ணு, 3. ஸ்ரீராம், 4. ஜெயச்சந்திரன் ஆகியோர் குற்றம் புரிந்தார்களா? இல்லையா என்பது தெரிய வரும். மேலும், திரு.ஜானகிராம் அவர்கள் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையில் 3வது பக்கத்தில் "பால்பாண்டியை அ.சா.2 முருகன் தரப்பில் அடிக்கும் போது நடந்த தகராறில் கீழே விழுந்ததில் முருகனுக்கும் அவரது மகன் வெங்கடேசனுக்கும் காயம் ஏற்பட்டுள்ளது." என்று குறிப்பிட்டுள்ளார். மேலும், சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை 4வது பக்கத்தில் 11.11.2013ம் தேதி இரவு 9.00 மணியளவில் நாகராஜ், பால்பாண்டி மற்றும்

அவர்களது உறவினர்கள் யாரும் கேத்தயகவுண்டன்பட்டியில் உள்ள முருகனின் வீட்டிற்கு செல்லவில்லை என்பதும், பால்பாண்டியை முருகன் தரப்பினர் அன்று இரவு 9.30 மணியளவில் வழிமறித்து அடித்து அதன் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டதாகவும், ஆதித்தமிழர் பேரவை நிர்வாகிகள் ஆலோசனையின் பேரில் சம்பவத்தை மிகைப்படுத்தி புகார் கொடுத்துள்ளார் என்பது சாட்சிகளின் விசாரணையில் தெரிய வருகிறது. எனவே, இவ்வழக்கில் சட்டப் பிரிவானது 294(பி), 324, 327, 236(1) இ.த.சவாக மாற்றம் செய்து, மற்றவர்களை நீக்கம் செய்து அறிக்கை சமர்ப்பிக்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார். சம்பவ சமயத்தில் ஸ்ரீராம் என்பவர் இளவராக இருந்துள்ளார். அவர் சம்பவம் நடந்த இடத்தில் இல்லை என்றும், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியை சமூகம் நீதிமன்றம் விசாரித்தால் மட்டுமே முன்மொழியப்பட்ட எதிரிகள் குற்றம் புரிந்தனரா? இல்லையா? என்பதை முடிவு செய்ய இயலும், சாட்சிகளை முழுமையாக விசாரிக்காமல், வழக்கு விசாரணையின் போது இம்மனுவை தாக்கல் செய்து இருப்பது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. எனவே, இந்த வழக்கில் 1 முதல் 4 வரையுள்ள நபர்களை குற்றவாளிகளாக சேர்க்கக் கோரி அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனு முற்றிலும் சட்டத்திற்கு முரணான ஒன்றாகும். எனவே, இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என குறிப்பிட்டு இருக்கிறார்.

4. இந்த மனுவில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில், இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

5. மேற்கண்ட மனு மற்றும் எதிருரை பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் தமது வாதுரையில், அ.சா.1, அ.சா.2, அ.சா.3 ஆகியோரின் சாட்சியங்களின் அடிப்படையில். குற்றம் சாட்டப்பட்ட பால்பாண்டி, ஸ்ரீராம், விஷ்ணு மற்றும்

ஜெயச்சந்திரன் ஆகியோர் இந்த வழக்கு குற்ற சம்பவத்தில் ஈடுபட்டுள்ளனர் என்றும், குற்றம் சாட்டப்பட்ட பால்பாண்டியின் பெயரும் முதல் தகவல் அறிக்கையில் உள்ளது என்றும், மேலே கூறப்பட்ட குற்றம் சாட்டப்பட்ட பால்பாண்டி, விஷ்ணு, ஸ்ரீராம் மற்றும் ஜெயச்சந்திரன் ஆகியோருக்கு எதிராக முதன்மை வழக்கு உள்ளதால், வழக்கின் சரியான தீர்வுக்காகவும், நீதியின் நலன் கருதியும், மேற்படி நபர்களை இந்த வழக்கில் எதிரிகளாக சேர்த்து, அவர்கள் மீது உரிய குற்றச் சாட்டுக்களை வனைந்து அவர்களையும் எதிரிகளாக சேர்த்து வழக்கு விசாரிக்கப்பட வேண்டும் என்றும் குற்ற முறையீட்டாளர் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு இருக்கிறது.

6. முன்மொழியப்பட்ட குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் தமது வாதுரையில், மேற்படி வழக்கானது சமூகம் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அமர்வு வழக்கு எண்.2/2022 என்ற வழக்கிற்கு எதிர் வழக்கில் உள்ள 7 எதிரிகளில் அ.சா.2 முருகன் முதல் எதிரியாகவும், அ.சா.3 வெங்கடேசன் 2வது எதிரியாகவும் இருப்பதாகவும், முன்மொழியப்பட்ட எதிரிகளில் (Proposed accused) பால்பாண்டி மற்றும் ஜெயச்சந்திரன் ஆகிய இருவர் அமர்வு வழக்கு எண்.02/2022ல் சாட்சிகளாக உள்ளனர் என்றும், மேற்படி வழக்கில் ஜெயச்சந்திரன் கொடுத்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், பால்பாண்டி என்பவர் காயம்பட்ட சாட்சி என்றும், முன்மொழியப்பட்ட எதிரிகள் ஸ்ரீராம், விஷ்ணு சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றும், அ.சா.1 கண்மணி (எ) முனியம்மாள், அ.சா.2 முருகன் இருவரும் கணவன் மனைவி என்றும், அ.சா.3 வெங்கடேஷ்குமார் அவர்களது மகன் என்றும், எனவே, அவர்களது சாட்சியத்தில் உண்மைத் தன்மை இல்லை என்றும், அது பின்னிட்டு இவ்வழக்கின் எதிரிகளுக்கு எதிராக உண்மையை மறைத்து சொல்லப்பட்டுள்ள சாட்சியம் என்றும் வாதிடப்பட்டது.

6.1. அ.சா.4 வேலுச்சாமி தனது முதல் விசாரணையில், 11.11.2013ம் தேதி முருகன் என்பவர் மதியம் 2.00 மணிக்கு சாப்பிட வந்தார் என்றும், அவரது குறுக்கு விசாரணையில், முருகனின் மனைவி கடைக்கு வரவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளதில் இருந்து அ.சா.1 கண்மணி (எ) முனியம்மாள் அ.சா.2 முருகனுடன் சாப்பிட வரவில்லை என்பது தெளிவாக தெரிய வருகிறது என்றும், மேலும் இதை வலுப்படுத்தும் விதமாக சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கையில் "முருகனின் மனைவி சம்பவ நேரத்தில் இல்லை " என்று பட்டியல் சாட்சி 16 ஜானகிராம், புலன் விசாரணை அதிகாரி குறிப்பிட்டுள்ளார். அ.சா.1 அவரது சாட்சியத்தில், நாகராஜ் எனது கணவர் முருகனின் சட்டையினை பிடித்துக் கொள்ள பால்பாண்டி எனது கணவரை கட்டையால் இடுப்பு, கை, கால் ஆகிய இடங்களில் அடித்தார் என்று சாட்சியம் அளித்துள்ளார். ஆனால், அ.சா.2 அவரது சாட்சியத்தில் பால்பாண்டி பிடித்துக் கொள்ள நாகராஜ் என்னை கட்டையால் இடுப்பு, நெஞ்சு, முதுகு ஆகிய இடங்களில் அடித்தார் என்று அ.சா.1ன் சாட்சியத்திற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதாக கூறியுள்ளார் என்றும் எதிர் மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது.

6.2. மேலும், அ.சா.ஆ.1 புகாரில் சம்பவம் 11.11.2023 அன்று இரவு 9.00 மணிக்கு நடைபெற்றதாகவும், அ.சா.1 தனது முதல் விசாரணையில், இரவு 7.30 மணியளவில் நடைபெற்றதாகவும், அ.சா.2, அ.சா.3 ஆகியோர் சம்பவம் இரவு 8.00 மணிக்கு நடைபெற்றதாகவும், மேற்படி இருவரும் சிகிச்சைக்காக சென்றபோது, அ.சா.10 மருத்துவரிடம் இரவு 9.30 மணிக்கு சம்பவம் நடைபெற்றதாகவும் மேற்படி மூவரும் சம்பவ நேரம் குறித்தும், சம்பவ இடம் குறித்தும் முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளனர் என்றும், மேலும், புகாரில் முன்மொழியப்பட்ட குற்றம் சாட்டப்பட்டவர்களான விஷ்ணு, ஜெயச்சந்திரன் ஆகியோரின் பெயர்கள் பற்றியோ, அவர்கள் கற்களை கொண்டு எறிந்ததாகவோ குறிப்பிடவில்லை என்றும், அ.சா.2, அ.சா.3 ஆகியோர் தன்னை தெரிந்த 3 நபர்கள் மற்றும்

தெரியாத 17 பேர்கள் தாக்கியதாக அ.சா.10 மருத்துவரிடம் தெரிவித்துவிட்டு, நீதிமன்ற சாட்சியத்தின்போது, நாகராஜ் தவிர முன்மொழியப்பட்ட எதிரிகளின் 4 பெயர்களை குறிப்பிட்டு சொல்லி இருப்பது நம்பத் தகுந்த சாட்சியம் அல்ல என்றும் வாதிட்டுள்ளார்.

7. இம்மனுவானது, அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் தங்களுடைய சாட்சியத்தில் சொல்லியுள்ள சங்கதிகளின் அடிப்படையில், எதிரிகளை புதிதாக இந்த வழக்கில் சேர்க்க வேண்டுமென்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் தங்களுடைய சாட்சியத்தில், தங்களை சாதி பெயரைச் சொல்லி திட்டியதாகவும், அடித்ததாகவும், ஆபாசமாகப் பேசியதாகவும் சாட்சியம் அளித்துள்ளனர். மேற்கண்ட இந்த வழக்கில் உள்ள எதிரியைத் தவிர, வேறு சில நபர்களான ஜெயச்சந்திரன், விஷ்ணு, ஸ்ரீராம் ஆகியோரும் தங்களை அடித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளனர். அசல் வழக்கில் உள்ள கோப்புகளை ஆராய்ந்து பார்க்கையில், அதில் சொல்லியுள்ள எதிரியும் தங்களை அடித்ததாக மேற்படி சாட்சிகள் தெரிவித்துள்ளனர். முன்மொழியப்பட்ட எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞரின் குறுக்கு விசாரணையின் போதும், இதர சாட்சிகளின் சாட்சியத்தின் போதும், முரண்பாடுகள் உள்ளன என்று சொல்லி இருந்தாலும், இந்த வழக்கில் இந்நிலையில் மேற்படி சங்கதிகளை ஏற்றுக் கொள்ள இயலாது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

8. மேலும், முதல் தகவல் அறிக்கை மூன்று எதிரிகளின் மீது போடப்பட்டு இருந்தாலும், புகார் மனுவானது, மேற்படி மூன்று எதிரிகளின் மீது கொடுக்கப்பட்டு இருந்தாலும், ஒரு எதிரியின் மீது மட்டுமே குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், இந்த வழக்கானது, முதலில் இ.த.ச பிரிவுகள் 294(பி), 324, 323, 506(1) மற்றும் பிரிவு 3(1) (X) SC/ST (PA)

Act)–ன் கீழ் பதிவு செய்யப்பட்டு, பிறகு சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இருப்பினும், இந்த வழக்கில் சாட்சிகளின் சாட்சியத்தின் போது, சாதிப் பெயரைச் சொல்லி ஆபாசமாக திட்டி அடித்ததாகவும், மிரட்டியதாகவும் சாட்சிகள் சாட்சியம் அளித்துள்ளதன் அடிப்படையில் ஆராய்ந்து பார்க்கும் போது, இந்த மனுவின் அடிப்படையில் கூடுதலாக எதிரிகளை சேர்ப்பதோடு அல்லாமல், SC/ST (PA) Act–ன் கீழும் இந்த வழக்கின் குற்ற சம்பவம் நிகழ்ந்துள்ளதாக சாட்சிகள் தெரிவித்துள்ளதால், இந்நீதிமன்றத்திற்கு இந்த வழக்கினை விசாரிக்கும் அதிகாரம் இல்லை என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. எனவே, இம்மனுவில் கண்டுள்ள சங்கதிகளின் அடிப்படையிலும், SC/ST (PA) Act–ன் கீழ் சொல்லப்பட்டுள்ள குற்ற சம்பவங்களின் அடிப்படையிலும் ஆராய்ந்து பார்க்கும் போது, இம்மனுவை இந்நிலையில் அனுமதித்து உத்தரவிட வேண்டும் என்றும், இந்த வழக்கினை தகுந்த அதிகாரம் உள்ள நீதிமன்றத்திற்கு மாற்ற வேண்டும் என்றும் இந்த நீதிமன்றம் மேற்கண்ட பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

9. மேலே விவாதிக்கப்பட்ட சங்கதிகளின் அடிப்படையில் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடப்பட்டும், இந்த வழக்கினை விசாரிக்க தகுந்த அதிகாரம் உள்ள நீதிமன்றத்திற்கு இந்த வழக்கை மாற்ற வேண்டி திண்டுக்கல் மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிபதிக்கு வேண்டுகோள் கடிதம் வைக்க வேண்டுமென்றும் இந்த நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

முடிவில்,

இந்த மனு அனுமதித்து உத்தரவிடப்படுகின்றது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால்

பிழை திருத்தம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026–ம் ஆண்டு ஜனவரி திங்கள் 29–ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

V DEEPA Digitally signed by V DEEPA Date: 2026.02.03 17:35:43 +0530

தலைமை நீதித்துறை நடுவர்.
திண்டுக்கல்.

மனுதாரர் / எதிரி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :– இல்லை.

எதிர் மனுதாரர் / குற்ற முறையீட்டாளர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :– இல்லை.

V DEEPA Digitally signed by V DEEPA Date: 2026.02.03 17:35:50 +0530

தலைமை நீதித்துறை நடுவர்.
திண்டுக்கல்.